# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 211/மா/2024**

**நாள்: 26.12.2025**

| | | |
|---|---|---|
| கோ. கோவிந்தராஜ்<br>சென்னை–83 | --- | முறையீட்டு மனுதாரர் |
| மண்டல அலுவலர்,<br>மண்டலம்–10<br>பெருநகர சென்னை மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 21.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.10.2024 அன்று பெறப்பட்டு 211/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 21.10.2024 நாளிட்ட மனுவில் இணைத்துள்ள 02.05.2023 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "கதவு எண்.18B, தெற்கு சிவன் கோயில் தெரு, 100 அடி சாலை, வடபழனி சென்னை–26 என்ற முகவரியில் 2வது தளத்தில் சட்ட விதிமுறைகளை மீறி ராட்சத இரும்பு ராடுகளை புதைத்து 50க்கு 50 என அகலம் நீளத்தில் ராட்சத Digital Banner அமைந்திருப்பதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் காணலாம். அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள இச்சாலையில் இப்பேனர் அமைக்கப்பட்டுள்ளதால் சூறாவளி காற்று ஏதேனும் வீசினால் அப்பேனர் மற்றும் இரும்பு ராடுகள் மனிதர்கள் மீது விழுந்து உயிர் சேதங்கள் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது. மேலும் சில ஆண்டுகளுக்கு முன் உயர்நீதிமன்றம் மற்றும் தமிழக அரசு இதுபோல் பேனர்கள் வைக்க கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஆகவே, இம்மனுவை கண்ட 7 நாட்களில் பேனர் மற்றும் இரும்பு ராடுகளை அப்புறப்படுத்தி ஜப்தி நடவடிக்கை எடுத்து அபராதம் விதித்து பதில் அளிக்க பொது நலன் கருதி இம்மனு அளிக்கப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 18.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் எவ்வித அறிக்கையும் கிடைக்கப் பெறவில்லை.

3. இருப்பினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. அழைப்பாணைகள் அனுப்பப்பட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

4. மனுதாரர் 09.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"சென்னை வடபழனி 100 அடி சாலை தெற்கு சிவன் கோயில் தெரு, கதவு எண்.18B என்ற முகவரியில் 2வது தளத்தில், போக்குவரத்து நெரிசல் உள்ள இந்த இடத்தில், சட்ட விதிமுறைகளை மீறி ராட்சத இரும்பு ராடுகளை புதைத்து 50 x 50 என அகலம் நீளத்தில் ராட்சத Digital Banner அமைக்கப்பட்டுள்ளதால் சூறாவளி காற்று வீசினால், அந்த பேனர் மற்றும் அதிலுள்ள ராட்சத இரும்பு ராடுகள் அச்சாலை வழியே செல்லும் மனிதர்கள் மற்றும் அருகில் உள்ள பள்ளியில் படிக்கும் மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் மீது விழுந்து அதிக அளவில் உயிர் சேதங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இவ்வகையான பேனர்கள் வைப்பதற்கு வட்டாட்சியர் தான் அனுமதி அளிக்க வேண்டும். எனவே, முறைகேடாக அமைக்கப்பட்டிருக்கும் மேற்கண்ட பேனரை அகற்றுவது குறித்து மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் தமிழக அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டுதலின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.".

5. எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் சார்பாக இளநிலை பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 09.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் குறிப்பிட்ட புகார் குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் குறிப்பிட்ட கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள பேனருக்கு, கட்டிட உரிமையாளருக்கு 13.01.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர், (R & F) அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அனுமதி அளித்த கடிதத்தின் நகலினைஇம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்."

6. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை வடபழனி 100 அடி சாலை தெற்கு சிவன் கோயில் தெரு, கதவு எண்.18B என்ற முகவரியில் 2வது தளத்தில். போக்குவரத்து நெரிசல் உள்ள இடத்தில், சட்ட விதிமுறைகளை மீறி ராட்சத இரும்பு ராடுகளை புதைத்து 50 x 50 என நீள அகலத்தில் ராட்சத Digital Banner அமைக்கப்பட்டுள்ளதால் சூறாவளி காற்று வீசினால், அந்த பேனர் மற்றும் அதிலுள்ள ராட்சத இரும்பு ராடுகள் அச்சாலை வழியே செல்லும் நபர்கள் மற்றும் அருகில் உள்ள பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்கள் மீது விழுந்து அதிக அளவில் உயிர் சேதங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்பதும், இவ்வகையான பேனர்கள் வைப்பதற்கு வட்டாட்சியர் தான் அனுமதி அளிக்க வேண்டும் என்பதும், முறைகேடாக அமைக்கப்பட்டிருக்கும் மேற்கண்ட பேனரை அகற்றுவது குறித்து மாண்பமை

உயர்நீதிமன்றம் மற்றும் தமிழக அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டுதலின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட புகார் குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கட்டிடத்தில் பேனர் அமைப்பதற்கு அக்கட்டிட உரிமையாளருக்கு 13.01.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர், (R&F) அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டித்தில் அமைக்கப்பட்டுள்ள பேனருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (R&F) அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று சென்னை மாநகராட்சி சார்பாக தெரிவிக்கப்பட்டிருந்தாலும், பொது மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏதுமில்லை என்பதனை உறுதி செய்து கொள்ளுமாறும், மேலும் மேற்கண்ட அனுமதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள 12m x 6m என்ற அளவில்தான் பேனர் அமைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறும், அவ்வாறு இல்லையெனில் அனுமதி அளித்த கடிதத்தில் உள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்று உறுதி செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாளை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர், சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 117 N.S.K. சாலை, கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

30/12/25

செயலாளர்

30/12/25 7/10